**மார்ச் – 23**

**"நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே. நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டதுமல்லாமல், அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள்." - எபி 10: 32, 33**

சகோதரர்களில் மிகவும் பலமுள்ளவர்களுக்கு மற்றவர்களுடைய உதவியும், உற்சாகப்படுத்தலும், சகாயமும் வேண்டியிருக்கின்றன. நாம் முற்றிலுமாக சுயதேவை பூர்த்தியுள்ளவர்களாக இருக்கிறோம் என்று உணராதபடி இருக்கத்தக்கதாகக் கர்த்தர் இதை ஒழுங்கு செய்திருக்கிறார். கர்த்தரை சரியாய் சார்ந்திருந்தாலும், நமக்குத் திராட்சைத் தோட்டத்திலுள்ள துணை வேலைக்காரருடைய ஒத்துழைப்பும், உற்சாகமும், அனுதாபமும், அன்பும் வேண்டியிருப்பதாகத் தோன்றும். சுவிசேஷ வேலையில், எந்த அளவிலாவது நாளின் உழைப்பையும், உஷ்ணத்தையும் உத்தரித்த யார் இந்த எண்ணத்திற்கு அனுதாபம் காட்டக் கூடியவர்களாயிருக்கிறார்கள்? தங்களிடம் மிகுதியான அளவில் ஊழியத்திற்குத் தகுதி அல்லது சந்தர்ப்பம் இல்லாத அநேகக் கர்த்தருடைய பிரியமான ஜனங்கள் சுவிசேஷ வேலையில் உடன் ஊழியக்காரராகவும், உதவியாளராகவும் இருக்க இங்கே ஒரு வழி இருக்கிறது. **- Z ’03, 40 (R 3143).**

கர்த்தருடைய ஜனங்கள் இரண்டு வழிகளில் சத்தியத்திற்காகத் துன்பப்படலாம். அவர்கள் சத்தியத்திற்காகப் பிரபலமாகப் பரிந்து பேசுகிறதினால், யார் சத்தியத்தை வெறுக்கிறார்களோ, அவர்களிடமிருந்து நிந்தையின் ஒரு பிரளயத்தையும், திரளான உபத்திரவங்களையும் தங்கள் மேல் வருவித்துக் கொள்ளுவார்கள். இவ்விதமாக நடத்தப்படும் பிரபலமான சகோதரருடன் நிற்கும் மற்றவர்களும் பல்வேறு வழிகளில் துன்பத்தைத் தங்கள் மேல் வரவழைத்துக் கொள்ளுகிறார்கள். கர்த்தரின் நிமித்தமாக மனமுவந்து சகித்த எல்லாத் துன்பமும் அவர் பார்வையில் அருமையானதாயிருக்கிறது.

**- P ’33, 46.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

கலா 3:4; 2யோவா 8; 2கொரி 4:8-18; பிலி 1:29,30; கொலோ 2:1; சங் 71:7; அப் 16:22-31; 17:5-9; 1கொரி 4:9; எபி 11:36; பிலி 1:7; 4:14; 1தெச 2:14.

**கோபுர வாசிப்பு : Z ’12, 275 (R 5090)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் உபத்திரவப்படுத்தப்பட்டேனா? நீதியின் பொருட்டு பாடனுபவித்தவர்களுக்கு நான் தோழனாயிருந்தேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?